

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் S.I.R ( வாக்காளர் பட்டியல் சிறப்பு சீராய்வு ஆய்வு ) பணிகள் குறித்து கழக துணை பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, ம.ஜெயச்சந்திரன், டி.என்.முருகன், இரா.கற்பகம், கார்த்திகேயன், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், மோ.தேன்மொழி, T.செல்வராஜ், M.அப்துல்சலாம், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் நேற்று (17.11.2025) மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் 2.50 கோடியாவது பயனாளியான தஞ்சாவூர் மாவட்டம், தென்னங்குடி பகுதியில் வசிக்கும் திருமதி.மனோன்மணியை, வயது 56 நேரில் சென்று சந்தித்து நலம் விசாரித்து மருந்துப் பெட்டகத்தினை வழங்கினார்கள்.

### மாநகர் போக்குவரத்துக் கழகம் –

# சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, நவ. 18-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (17.11.2025) தலைமைச் செயலகத்தில், ஹரியானாவில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டிற்கான 18 வது Urban Mobility India மாநாட்டில் தேசிய அளவில் கலந்து கொண்ட 17 பெருநகரங்களில் நாட்டிலேயே சிறந்த பொதுப் போக்குவரத்து அமைப்பு கொண்ட நகரமாக சென்னை மாநகர் போக்குவரத்து கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான விருது, சிறந்த பல்முனை போக்குவரத்து ஒருங்கிணைப்புடன் கூடிய மெட்ரோ இரயில் (*Metro Rail with the Best Multimodal Integration*) என்ற பிரிவின் கீழ், **நகர்ப்புற போக்குவரத்தில் சிறந்து விளங்கு வதற்கான விருது** (*Award of Excellence in Urban Transport*) மற்றும் சிறந்த பயணிகள் சேவை மற்றும் திருப்தி அளிக்கும் மெட்ரோ இரயில் (*Metro Rail with the Best Passenger Services and Satisfaction* ) என்ற பிரிவின் கீழ் **நகர்ப்புற போக்குவரத்துக்கான பாராட்டுச் சான்றிதழ்** (*Commendation Award in Urban Transport*) **ஆகிய விருதுகளை** போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சென்னைமாநகர் போக்குவரத்துக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் த. பிரபுசங்கர், ஆகியோர் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

**"நாட்டிலேயே சிறந்த பொதுப் போக்குவரத்து அமைப்பு கொண்ட நகரமாக" சென்னை— மாநகர் போக்குவரத்து கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்பட்ட விருது**

ஹரியானா மாநிலத்தில் 9.11.2025 அன்று நடைபெற்ற 2025ஆம் ஆண்டிற்கான 18வது நகர்ப்புற போக்குவரத்து இந்தியா (*Urban Mobility India*) மாநாட்டில் தேசிய அளவில் கலந்து கொண்ட 17 பெருநகரங்களில் **"நாட்டிலேயே சிறந்த பொதுப் போக்குவரத்து அமைப்பு கொண்ட நகரமாக" சென்னை - மாநகர் போக்குவரத்து கழகம்** தேர்வு செய்யப்பட்டு, அதற்கான விருது வழங்கப்பட்டது.

**சென்னை மாநகர் போக்குவரத்து கழகத்தின் சிறப்பம்சங்கள்**

சென்னை மாநகர் போக்குவரத்து கழகத்தில், தினசரி 12.5 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண் பயணிகள் பயன்பெறும் வகையில் கட்டணமில்லா **"விடியல் பயணம்"** திட்டத்தின் மூலம் பெண்களுக்கு இலவசப் பேருந்துப் பயண சலுகை வழங்கப்படுவதுடன், இந்தியாவிலேயே முதன்முறையாக பள்ளி மாணவர்களுக்கு பிரத்தியேகமான சிறப்பு பேருந்து சேவையும் வழங்கப்படுகிறது.

மேலும், அனைத்து பேருந்துகளிலும் மின்னணு பயணச்சீட்டு இயந்திரம் (ETM) அறிமுகம் செய்து, தேசிய பொது போக்குவரத்து அட்டை (NCMC), UPI, கிரெடிட்/ டெபிட் கார்டு மூலம் டிஜிட்டல் கட்டண வசதியும் வழங்கப்படுகிறது. அத்துடன் **"சென்னை ஒன்"** செயலி மூலம், பன்முக போக்குவரத்து பயணத் திட்டமிடல் மற்றும் மாநகர் பேருந்து (MTC), மெட்ரோ ரயில், புறநகர் ரயில் ஆகியவற்றிற்கு ஒரே பயணச்சீட்டு பயண வசதியும், மின்சார பேருந்துகள் சேவைகள் மூலம் வாயுக்களில் உமிழும் மாசுக்களை குறைத்து, பசுமை போக்குவரத்திற்கும் வித்திடுகிறது.

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட இரண்டு விருதுகள்**

சிறந்த பல்முனை போக்குவரத்து ஒருங்கிணைப்புடன் கூடிய மெட்ரோ இரயில் (*Metro Rail with the Best Multimodal Integration*) என்ற பிரிவின் கீழ், **நகர்ப்புற போக்குவரத்தில் சிறந்து விளங்குவதற்கான விருது** (*Award of Excellence in Urban Transport*) மற்றும் சிறந்த பயணிகள் சேவை மற்றும் திருப்தி அளிக்கும் மெட்ரோ இரயில் (*Metro Rail with the Best Passenger Services and Satisfaction*) என்ற பிரிவின் கீழ் **நகர்ப்புற போக்குவரத்துக்கான பாராட்டுச் சான்றிதழ்** (*Commendation Award in Urban Transport*) ஆகிய விருதுகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டன.

### வேலூர் வடக்கு மாவட்டம் கே.வி.குப்பம் ஒன்றியம் சென்னங்குப்பம்,

# மாவட்ட மகளிர் தொண்டரணி பா.சிவகாமி இல்லத் திருமண விழா!

## அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெறுகிறது!

வேலூர், நவ. 18-

கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தலைமையில், அமைச்சர் ஆர்.காந்தி, வேலூர் வடக்கு, தெற்கு மாவட்டப் பொறுப்பாளர்கள் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி, ஏ.பி. நந்தகுமார் முன்னிலை யில், மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் துணை செயலாளர் சி.கோபி, எல்.பி.எப் சி.மதியழகன்,ம. அபிசேக் ஆகியோர் வரவேற்க, வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் சென்னங்குப்பத்தைச் சேர்ந்த சி.பாண்டியன் & பா.சிவகாமி இவர்களின் மகன் பா.காமேஷ் என்பவருக்கும், வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் ஆலம்பட்டறை எம்.சண்முகம் & எஸ்.சஞ்சலாகலா இவர்களின் அன்பு மகள் எஸ். இலக்கியா எம். எஸ்சி. ஆகிய இவர்களின் திருமணம் 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் பள்ளிகொண்டா... ரங்கநாதர் ஆலயத்தில் நடைபெறுகிறது.

மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, சட்டமன்ற உறுப்பினர்கள், பா. கார்த்திகேயன், வி.அமலு விஜயன் எம்.எல்.ஏ, மேயர் சுஜாதா, ஆனந்தகுமார், துரைசிங்காரம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், கே. சீதாராமன்,எல் இரவிச்சந்திரன், இரா முருகேசன், இ. சத்யானந்தம், கள்ளூர் கே. இரவி, வி.கே.ஆர் சுந்தரவடிவேலு, கே.தயாளமூர்த்தி, விடி.சிவகுமார் பாரதி வெங்கடேசன் மற்றும் விடி ஜெயக்குமார் எம் அசோக் குமார், சா. பரிமளம் இரா. தாமோதரம், தலைவர்கள் வ. எத்திராசன், எம்.வெங்கடேசன், ஏ.ஏழ்மைநாதன், மரு.கோவி. தூயவன், இளைஞரணி எஸ்.மோகன், வில்வநாதன் ஆகியோர் வாழ்த்துகின்றனர். அ.தீபக், அ.திலிப் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மனித வனஉயிரின மோதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வனத்துறை சார்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பினை சேலம், மணக்காடு, காமராஜர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மேயர் ஆ.இராமச்சந்திரன், மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங் ரவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### சேலத்தில்

# வனத்துறை சார்பில் விழிப்புணர்வு பயிற்சி வகுப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், நவ.18-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் மனித - வன உயிரின மோதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வனத்துறை சார்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்தார் .

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் மனித வனஉயிரின மோதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வனத்துறை சார்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பினை சேலம், மணக்காடு, காமராஜர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலை யில் தொடங்கி வைத்தார்கள். பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் வன உரிமைகளைப் பாதுகாத்திடவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் மனித - வன உயிரின மோதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வனத்துறை சார்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்றையதினம் தொடங்கி வைக்கப்படுகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் அரசாணையின்படி தமிழ்நாடு முழுவதும் 20,000 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வனப்பாதுகாப்பு, வனஉயிரின கனக்கெடுப்பு, வனத்தீ மேலாண்மை மற்றும் மனித வன உயிரின மோதல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு முழுவதும் 11 ஆம் வகுப்பு அரசு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு 20,000 நபர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி வகுப்பில் காடுகள், காட்டுயிர்கள் பாதுகாப்பு - சவால்களும் தீர்வுகளும், வனப்பாதுகாப்பு, காட்டுத்தீ மேலாண்மை, காட்டுயிர்கள் கணக்கெடுப்பு உள்ளிட்ட தலைப்பில் வகுப்புகள் எடுக்கப்படுகிறது.

சென்னை மாவட்டத்தில் 1,500 மாணவ, மாணவியர்களும், இதர 37 மாவட்டத்தில் 500 மாணவ, மாணவியர்கள் வீதம் மொத்தம் 18,500 மாணவ, மாணவியர்கள் ஆக மொத்தம் 20,000 மாணவ, மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளித்து வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பு வல்லுநர்களாக உருவாக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க 25 ஆசிரியர்களை தேர்வு செய்து ஒவ்வொரு ஆசிரியரும் 20 மாணவ, மாணவியர்களுக்கு பயிற்சி அளித்து குழந்தைகளை வனம் மற்றும் வன உயிரின பாதுகாப்பு வல்லுநர்களாக உருவாக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் தொடக்கமாக சேலம் மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 25 ஆசிரியர்களுக்கு 17.11.2025 முதல் 18.11.2025 ஆகிய இரண்டு நாட்கள் தொடர்ந்து பயிற்சி அளித்து பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு ஒரு மாத காலம் பயிற்சி அளித்தும் மாணவ, மாணவியர்கள் கற்றல் திறன் அறிந்து வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பு வல்லுநர்களாக உருவாக்கப்படுவார்கள்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக வனத்துறை சார்பில் மனித - வன உயிரின மோதல் குறித்தான விழிப்புணர்வு கையேட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கினார்கள்.


இந்நிகழ்ச்சியில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மேயர் ஆ. இராமச்சந்திரன், மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங் ரவி, சேலம் ஓமலூர் சமூக காடுகள் வனச்சரக அலுவலர் திருமதி ரா.வீரமணி, உயிரியலாளர் முனைவர் இரா. பிரவீன்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதூர் ஊராட்சி ஒன்றியம், N.ஜெகவீரபுரம் ஊராட்சி, T.சுப்ரமணியபுரம் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.10.42லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி. மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் தினகரன்,ராஜாராம், செல்வராஜ், ராதாகிருஷ்ணன், செல்லப்பாண்டி, ராமலிங்கம், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. முகமது அலி
### நவம்பர் 18 (2013)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஈரோடு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, 1953ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

ஈரோடு வீட்டுவசதி அடமான வங்கி இயக்குநர், மாவட்ட தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**